**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 60** **நாள்: 01.06.2017**

## உலக புகையிலை ஒழிப்பு தினத்தை முன்னிட்டு பொதுசுகாதாரத்துறை சார்பில் சிறப்பு விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது.

பெருநகர சென்னை மாநகராட்சி, பொதுசுகாதாரத்துறை சார்பாக, சென்னை மாநகர் முழுவதும் உள்ள கல்வி நிறுவனங்கள், குடிசை வாழ்பகுதிகள், தொழிற் நிறுவனங்கள் மற்றும் மக்கள் அதிகமாக கூடும் இடங்களில் நோய்த்தடுப்பு மற்றும் கட்டுப்பாடு குறித்து விழிப்புணர்வு முகாம்கள் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன.

உலகம் முழுவதும் ஒரு வருடத்திற்கு சுமார் 60 லட்சம் மக்கள் புகையிலை பொருட்கள் பயன்படுத்துவதினால் இறப்பதாக உலக சுகாதார நிறுவன அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. ஒவ்வொரு வருடமும் மே மாதம் 31ம் தேதி உலக புகையிலை ஒழிப்பு தினமாக அறிவிக்கப்பட்டுள்ளது. புகையிலை வகை பொருட்களில் சுமார் 3000 வகையான நச்சுப் பொருட்கள் உள்ளன. இவற்றுள் 200க்கும் மேற்பட்டவை புற்றுநோயை உருவாக்கும் நச்சுப் பொருட்கள் ஆகும். வாய், குரல்வளை மற்றும் நுரையீரல் புற்றுநோய் 90 சதவீதம் புகையிலை பழக்கத்தால் மட்டுமே வருகிறது. ஒவ்வொரு சிகரெட் புகைக்கும் போதும், வாழ்நாளில் 8 நிமிடங்கள் குறைவதாக ஆராய்ச்சியில் கண்டறியப்பட்டுள்ளது. இது சம்பந்தமான விழிப்புணர்வு சென்னை மாநகர பொதுமக்களுக்கு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

புகையிலையினால் பொதுமக்களுக்கு ஏற்படும் தீங்கினை கருத்திற் கொண்டு புகையிலை இல்லாத ஆரோக்கியமான சுற்றுச்சூழலை உண்டாக்க பெருநகர மாநகராட்சி ஆணையர் முனைவர்.தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்களால், உலக புகையிலை ஒழிப்பு தினமான 31.05.2017யை முன்னிட்டு சென்னை மாநகர் முழுவதும் பொதுமக்களுக்கு, புகையிலையால் ஏற்படும் தீமைகளை குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துமாறும் புகையிலை தடுப்பு சட்டம், 2003ன் விதிகளை மீறி, கல்வி நிறுவனங்களை சுற்றி 300 அடி தூரத்திற்குள் புகையிலை வியாபாரம் செய்பவர்கள், பொது இடத்தில் புகை பிடிப்பவர்கள், புகையிலை பெட்டி மற்றும் உறையின் மேல் இருபக்கமும், 85 சதவீதத்திற்கும் குறைவாக புகைப்படத்துடன் கூடிய நல எச்சரிக்கை அச்சிடப்படாமல் விற்பனை செய்பவர்கள் ஆகியோர்கள் மீது அபராதம் விதித்து, உரிய நடவடிக்கை எடுக்குமாறு மாநகராட்சி பொதுசுகாதாரத்துறைக்கு அறிவுறுத்தப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக, 31.05.2017 அன்று சென்னை பெருநகரம் முழுவதும் மண்டல சுகாதார அலுவலர்கள் தலைமையில், துப்புரவு அலுவலர்கள் மற்றும் சுகாதார ஆய்வாளர்கள் கொண்ட குழுவால் அனைத்து மண்டலங்களிலும் உள்ள வியாபார நிறுவனங்கள், கடைகள் ஆய்வு செய்யப்பட்டு, புகையிலை தடுப்பு சட்டம், 2003ல் உள்ள விதிகளை மீறி வியாபாரம்

செய்த கடைக்காரர்களிடமிருந்து 284 கிலோ கிராம் புகையிலை பொருட்களை பறிமுதல் செய்யப்பட்டு, ரூ.63,000/– அபராதமும் விதிக்கப்பட்டது. மேலும், பொதுமக்களுக்கு புகையிலையினால் ஏற்படும் கேடுகள் குறித்து விளக்கும் துண்டுப் பிரசுரங்கள் வழங்கி விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

மேலும், மண்டலம்–5க்குட்பட்ட ஸ்டான்லி மருத்துவமனை எதிரில் உள்ள கடைகளில் மாநகர சுகாதார அலுவலர் மரு.என்.ஏ.செந்தில்நாதன் தலைமையில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு விதிகளை மீறி வியாபாரம் செய்த ஐந்து கடைகளில் அபராதம் விதிக்கப்பட்டு, 10 கிலோ புகையிலை பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன. இந்த நடவடிக்கையின் போது கூடுதல் மாநகர சுகாதார அலுவலர் மரு.ராஜ்குமார், சுகாதார கல்வி அலுவலர் முனைவர்.டி.ஜி.சீனிவாசன், மண்டல சுகாதார அலுவலர் மரு.ஹேமமாலினி மற்றும் சுகாதார துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : துணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**